# கிறீஸ்தவக் கீர்த்தனைகள்



இயற்றியவர்

கலாரட்ணா, கலாபூஷணம்

மஹாவித்வான்

யாழ்ப்பாணம், இணுவில்

பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் MA-J.P

அவர்கள்.



வெளியீடு:
வீரகிருஷ்ண வெளியீட்டகம்
இணுவில் தெற்கு, இணுவில்.
சுன்னாகம்.
T.P 021-2223924

உ
卐
சிவமயம்

# மஹாவித்துவான் மா. த. ந. வீரமணிஐயர்

## வெளியீடு

வீரகிருஷ்ண வெளியீட்டகம் (பதிவு இல....)
இணுவில் தெற்கு,
இணுவில்.
இலங்கை

தொலைபேசி இலக்கம் 021-222-3924

*பதிப்புரிமை – திருமதி . சு. வீரமணிஐயர்*
*மஹாவித்துவான்*

வீரமணி ஐயாவின் ஆக்கங்களை வெளியிடுவோர்
பதிப்புரிமையாளரின் அனுமதி பெற்றே வெளியிட வேண்டும்.
ஐயாவின் ஆக்கங்கள் யாவும் மேற்குறித்த பதில் வெளியீட்டகம்
ஊடாக வெளியிடப்படும்.



28 Lewis Crescent
Neasden
N W 10 ONR

Mr and Mrs Vethaparanam Manoranjanna & Suzanna

My Family and I were cagerly anticipating the visit of Yalpanam Sri N. Veeramani Iyer as chief guest for my Carnartic Vocal Arangetram.Unfortunarely, shortly before my Arangetram, we received the sad news that he had passed away. Even though he wasn't able to be there physically, I'm sure that spiritually he was there with his blessings.

Yalparam Sri N.Veeramani Iyer was a great composer and Guru and my Guru Smt Sivasakti Sivanesan adored him. Through my Guru I have been able to learn his songs and learn about him. That is why I wanted to make a small donation to help publish a book and preserve his compositions.

I am sure his blessings will be with our family forever.

Suzanna Manorajan

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
18.03.2004

பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர், எமது ஈழத்து மண்ணின் இசை வரலாற்றில் தடம் பதித்துச் சென்றவர். அன்னாரது இசைஞானமும், வித்துவச் சிறப்பும் அவரது தனித்துவமிக்க ஆளுமையை அனைத்துலகத் தமிழ் மக்களின் மனதில் ஆழப்பதிந்து கொண்டது. எமது யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடத்தில் அவரது இசைப்பணியை எமது மக்கள் அளவளாவி இன்புற்றனர். அவர் எமது மக்களுக்கு விட்டுச்சென்ற அவரது சீடத்துவப் பரம்பரையே தமிழ் மக்களின் இசை வரலாற்றில் எமது முதுசம் எனலாம்.

தன்னை ஒரு மதவட்டத்தினுள் குறுக்கிக் கொள்ளாமல் தமிழ் மக்களின் தனித்துவமான சிந்தனை யான உலக மறைகளில் பொதுமையை கண்டவர். அவரது இசை அனுபூதி அனுபவத்தின் சிறப்பு அவர் கிறிஸ்துபிரான் பெயரில் யாத்த கீர்த்தனைகள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவரின் கீர்த்தனைகளுக்கு வளம் தந்து சிறப்பிக்கும் இப் பிரசுரம் அவரது நீங்காத நினைவை எமது மக்களின் மனதில் பசுமையான எண்ண அலை களை மீட்டுநிற்கும். அவரது இசைபணிக்கும் வாழ்வுக்கும் இறைவனுக்கு நன்றி கூறுவதோடு இந்நூல் அவரது நினைவுகளை எமது மக்களின் மனதில் சுமந்து நிற்கும். அவர் எமக்கு விட்டுச் சென்ற இசைச் செல்வத்தின் அசைவியக்கத்தை முன் நிறுத்தும் அனைவரையும் பாராட்டி இறையாசியை வேண்டுகிறேன்.

இறைபணியில் உங்கள் ஆயர்,
பேரருள் திரு.இ.தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ் ஆயர்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறீஸ்தவ, இஸ்லாமிய நாகரீகத்துறை தலைவரின் அணிந்துரை.*

சில பெரியார்கள் தமது காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றவர்களாக வாழ்ந்துள்ளனர். ஆனால் வேறு சிலர் சூழல், காலம் என்பவற்றை வென்று, பரந்த நோக்கும், திறந்த உள்ளமும் கொண்டு வாழ்ந்ததனாலேயே வரலாறு அவர்களை மறப்பதில்லை. தொடர்ந்து வாழும் சமூகத்திற் காக மரணத்தின் பின்னும் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்கள். ஏறத்தாழ 10-15 வருடங்களிற்கு முன் பல்கலைக்கழக கிறிஸ்தவ கத்தோலிக்க மாணவர் களின் ஒன்றியங்கள் நடாத்திய ஒளி விழாக்களின் போது மேடையேற்றுவதற்காக பத்து கன்னியர், மன்னிப்பு போன்ற நாட்டிய நாடகங்களை அவர் எழுதி இசையமைத்துத் தந்தார். அவரை அவர் வீட்டில் சந்தித்து உரையாட பல சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்த போது அவர் மிகவும் அன்போடு உபசரித்து, கலந்துரையாடிய சந்தர்ப்பங்களை நான் மறக்க முடியாது. அத்துடன் பரந்த நோக்கோடு

இயேசுவின் வாழ்வைப் படித்தவர் அவர். வெறுமனே கலை வடிவங்களுக்குப் பொருளாக இயேசுவின் வாழ்வை யும், போதனைகளையும் பார்த்தவர் அல்லர். இவை களினால் ஏதோ ஒரு விதத்தில் ஆட்கொள்ளப்பட்டு, தனது உள்ள உணர்வுகளை இந்நாட்டிய நடனங்கள் போன்றவற்றின் வழியாக உணர்த்தவும், ஏன் போதிக்கவும் முற்பட்டவர் என்று துணிவோடு கூறலாம்.

அந்தக் காலத்திலே இயேசுவின் வாழ்வு பற்றிய பாடல்களை அவர் பாடிக் காண்பித்தார். இப்பாடல்கள் அவரது உள்ளத்தில் தொடர்ந்து வளர்ச்சி பெற்று இன்று "கிறிஸ்தவ கீர்த்தனைகள்" என்ற நூல் வடிவம் பெறுவதையிட்டு நான் மகிழ்கின்றேன்.

கிறிஸ்தவர் அல்லாத ஒருவர், அதுவும் இவ்வாறான பாண்டித்தியமும், பரந்த உள்ளமும் கொண்ட பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்கள் எழுதிய கிறிஸ்தவ கீர்த்தனைகள் மிகவும் சிறப்பு மிக்கதே. அத்தோடு இது ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்தை எமக்குத் தரும் என்பதில் ஐயப்பாடு ஏதுமில்லை.

நான் எனது என்ற குறுகிய வட்டத்திலிருந்து விடுபட்டு பரந்த நோக்கோடு எல்லோரையும் மதித்து, ஏற்றுவாழ்ந்து, ஒருமைப்பாட்டையும் சமாதானத்தையும் நாம் காண இந்நூல் ஓர் ஊக்குவிப்பாக திகழும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்களின் மறைவுக்குப் பின்னும் இந்நூலை வெளியிடுவோர்க்கு எமது பாராட்டுக்களும் நன்றியும் உரித்தாகுக. எமது வாழ்வு பிறர்க்கு நன்மை பயக்க வேண்டும் என்று வாழ்ந்த இப்பெரியார் விட்டுச்சென்ற பாதை எமக்கு என்றுமே முன்மாதிரியாகவுள்ளது.

அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ்,
தலைவர், கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.
22.03.2004

## ஆசிச் செய்தி

1990 ஆண்டின் இறுதிப் பகுதியில் ஓர்நாள், இறையியல் கல்லூரியில் ஓர் அதிசயப் பிறவியைச் சந்திக்கும் ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்தது. இறையியல் கல்லூரிக்கான கீதத்தை அமைக்கும் பணியில், கருத்துச் சுருக்கத்தைக் காதிலே கேட்ட வுடனேயே நாவிலே பாட்டு "ம்ம்ம்...... இறையியல் கல்லூரி வாழ்க....." இறையியல் மாணவர்கள், விரிவுரையாளர்கள் யாவருமே அசத்துப் போய்விட்டோம். இதுவே இலக்கண வித்தகர் வீரமணி ஐயாவுடனான முதல் சந்திப்பு.

தமிழுக்கும் சைவத்துக்கும் அற்புத தொண்டாற்றிய அறிவுக் கடல். "நிறைகுடம் தழம்பாது" என்று கூறுவார்கள் அது போன்று கண்ணிலே ஒளி, பேச்சிலே நிதானம், உள்ளத்திலே தூய்மை, வாழ்விலே நேர்மை, பாடலிலே கருத்தாழம் மிக்க கணீர் என்ற நாதம் இவையெல்லாவற்றையும் கொண்டு கிறிஸ்தவ சமயத்தையும் ஆழமாகக் கண்டவர் தான் ஐயா. திருமறையின் தத்துவங்களை அழகான எளிய நடையில் பாடலாக்கி தனக்கே உரித்தான தனித் துவமாய்த் திகழ்ந்தவர். அன்னார் இயற்றிய, கிறிஸ்து பெருமா னுடைய பிறப்பு தொடக்கம் இறப்பு, பின் உயிர்ப்பு வரையான பாடல்கள் அச்சு வடிவம் பெற இருப்பதை அறியும் போது என் உள்ளம் பூரிக்கின்றது. அமரர் அவர்கள் ஆசையை நிறைவேற்றுவது அவருக்கு நாம் செய்யும் தொண்டு எனக் கருதுகிறேன்.

இந்நூலின் முதல்ப் பாடலை ஒரு நாள் என் முன்பாகவே பாடிப் பதிவு செய்து எனக்களித்தார். அதுவே ஆண்டவர் கற்பித்துத் தந்த பரமண்டல செபம். "வானகத்தில் உள்ள எங்கள்....." அமரர் ஐயா அவர்கள் வாழ்ந்த போது மிகவும் பயனுள்ள வாழ்வை வாழ்ந்தார். அவர் அமரத்துவமடைந்தாலும் அவர் விதைத்த விதை கள் இன்று பல பெரிய விருட்சங்களாக அநேகருக்கு அறிவு எனும் ஒளியைக் காண்பித்துள்ளது. அன்னாரின் பாடல்கள் காது களிலே ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அன்னாரின் பணி தமிழ் மக்களது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். இந்து சமயத்துக்கும், கிறிஸ்தவ சமயத்துக்கும் பாலமாகத் திகழ்ந்த அமரர் அவர்களை தமிழ்க் கிறிஸ்தவம் போற்றி வாழ்த்தும். இந்நூல் வெளிவர உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆசிக்கிறேன். இறையாசி அமரர் வீரமணி ஐயாவுடைய ஆன்மாவோடும் அவர் ஆற்றிய பணிக ளோடும், அவர் விட்டுச் சென்ற அன்புறவுகளோடும் இருக்க பிரார்த் திக்கின்றேன்.

நன்றி.

குருமனை.<br>
நவாலி<br>
01.04.2004

வண.ஏ.எஸ்.தேவகுணானந்தன்<br>
சபைக்குரு<br>
தென்னிந்திய திருச்சபை - யாழ்பேராயர்

மஹாவித்வான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்கள் 1/2 நூற்றாண்டு காலத்திற்கு மேலாக, ஈழநாட்டிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி பல்லாயிரக் கணக்கான மக்களால் போற்றப்பட்டவர். ஐயா அவர்கள் எல்லோரையும் அன்போடு நேசித்தவர். அவர் ஒரு குறுகிய வட்டத்துள் வாழாது, உலகம் முழுவதும் வியாபித் திருக்கக்கூடிய அன்பு என்ற பரந்த வட்டத்துக்குள் வாழ்ந்து பழக்கப்பட்டவர். தன்னுடைய கவித்து வத்தையும், புலமைத்துவத்தையும் நேசிக்கிறார்களோ அவர்களை எல்லாம் தனது விசுவாசிகளாகவே கருதினார்.

இவ்வாறான அன்புள்ளம் கொண்ட ஐயா அவர்களின் ஆக்கங்கள் பற்றியும், ஆற்றல்கள் பற்றியும் ஐயா அவர்களின் முதல் மாணவியும், வளர்ப்பு மகளுமாகிய சிவசக்தி சிவனேசன் அவர்கள் அவ்வூர் மாணவர்கள் மத்தியில் எடுத்துரைத்தார். அதனை ஆர்வத்துடன் கேட்ட செல்வி சுசன்னா வேதாபரணம் அவர்கள், தனது குருவாகிய சிவசக்தி தன் குரு மீது அவர் வைத்திருக்கும் பக்தியையும், விசுவாசத்தையும் எண்ணி வியந்து, தானாகவே சிவசக்தி சிவனேசனிடம் முன்வந்து ஐயாவின் ஆக்கங்களுள் ஒன்றான கிறிஸ்தவ கீர்த்தனைகள் என்ற பாடல்களை புத்தகமாக்க விரும் பினார். அவர் கொடுத்திருக்கும் பண உதவியுடன் கிறிஸ்தவ கீர்த்த னைகள் என்ற பாடல் புத்தமாக வெளியிடுவதை யிட்டு பெருமகிழ்வடைகிறேன். திரு.திருமதி வேதா பரணம், மனோரஞ்சனா தம்பதிகளுக்கும், செல்வி சுசன்னா வேதாபரணத்திற்கும் அமரர் மஹாவித்வானின் ஆசி என்றும் நிலைக்க பிரார்த்திக்கின்றேன்.

திருமதி சுசீலா வீரமணிஐயர்

# நன்றியுரை

எமது ஈழமண்ணில் முத்தமிழ் வித்தகராக விளங்கியவர் அமரர் மஹாவித்வான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயா அவர்கள். இயல், இசை, நாடகத் துறை மூன்றிலும் நூல்கள் பலவற்றை எழுதியுள்ள பெருமை இவருக்குண்டு.

அவருடைய ஸாகித்தியங்களில் ஒன்றான ''கிறிஸ்தவ கீதங்கள்'' என்னும் கீர்த்தனைகள் புத்தக வடிவமாக வெளியிட முன்வந்துள்ளேன். இந்த பணியைச் செய்கின்ற பொழுது, ஐயா அவர்களுடன் நான் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது செய்த தொண்டாகவே கருதுகிறேன்

இப்பணியை செய்வதற்கு ஐயா அவர்களின் மாணவியாகிய சிவசக்தி சிவனேசன் அவர்களின், மாணவியான சுசன்னா வேதாபரணம் அவர்களுக்கு முதற்கண் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும்

இந் நூலுக்கு அணிந்துரை தந்துதவிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அவர் களுக்கும், இந் நூலுக்கான ஆசிச் செய்தியைத் தந்த வண.ஏ.எஸ். தேவகுணானந்தன்(சபைக்குரு தென் னிந்திய திருச் சபை யாழ் பேராயர்) அவர்களுக்கும் மற்றும் பேரருள் திரு.இ. தோமஸ் சவுந்தரநாயகம் (யாழ்ஆயர்) அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இம்மலரை அழகுற அச்சேற்றிய *சிவரஞ்சனம் ஓவ்செற்* அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.சுசீலா வீரமணிஐயர்.

# ஜெபம்

01. இராகம்-யமன்கல்யாண்

தாளம் - ஆதி

(கண்ணிகள்)

வானகத்தில் உள்ள எங்கள் தந்தாய் - உங்கள்
வளமார் நாமத்தைப் போற்றுகிறோம்
மானிலத்தில் உங்கள் மாண்பரசு - வர
மனமாரப் போற்றியே வேண்டுகிறோம்.

விண்ணுலகில் உங்கள் திருவுள்ளம் - வந்து
விருப்புடனே நிறைவேற்றுதல் போல்
மண்ணுலகில் உங்கள் திருவுள்ளம் - வந்து
மனநிறை பெறவே வேண்டுகிறோம்.

உண்ணும் அன்றாட உணவினையே - நீவிர்
உவந்தே எமக்கே அளித்திடுவீர்
பண்ணும் குற்றங்களை எம்மிடத்தே - நீவிர்
பாவ மன்னிப்பினைச் செய்தருள்வீர்.

சோதனைக் கெங்களை உட்படுத்தி - மனம்
சோர்ந்திடச் செய்யாதீர் ஆண்டவரே
தீது புரிபவர் செய்கையிலே - நின்றுன்
திருவுள்ளத்தால் விடுவித் தருள்வீர்

"ஆமென்"

# யேசு பிறந்தார்

02. இராகம் - பூபாளம்

தாளம் - ஆதி

பல்லவி

ஏசு பிரான் பிறந்தார் - பரிசுத்த
ஆவியின் ஆசியால் அன்னை மரியாளிடம்

அனுபல்லவி

காசினி மீதினில் கன்னி மரியாள் - தவச்
சூசைக்குப் புண்ணியச் செல்வனாக - எங்கள்

சரணம்

இம்மாநிலந்தனில் இலங்கிடும் வாழ்வினில்
நம் மானிடர் செய்யும் நலிவு பாபத்தில் நின்றும்
தம் மாவியினால் மீட்க தன்நகர் பெத்தலையில்
இம்மானுவேல் என்னும் இறைதூதராக வந்து!

# யேசு பிறந்தார்

இராகம் - கமாஸ் தாளம் - ஆதி

பல்லவி

தேவபாலன் வந்து தோன்றினான் - நம்
தவமாகப் புவி மீதிலே பெத்தலை நகரினில்

வானத்திலே விண்மீன் எழுந்ததே - எம்மை
வழிகாட்டி பெத்தலை வந்ததே
மோனக் குழந்தையை தந்ததே - அந்த
மரியாளின் மடிமீதிலே அத்திரு மதலையாய்

ஞானியர் நாம்சிரம் தாழ்த்துவோம் - அந்த
ஞானக் குழந்தையை வாழ்த்துவோம்

பேழையில் பொன்தூபம் வெள்ளைப் போளமும்
காணிக்கை தந்தே நாம்பாடித் துதித்திடுவோம்.

# விண்ணரசு அறிவிக்கப்படுகிறது

03. இராகம் : ஹம்ஸத்வனி

தாளம் - ஆதி

பல்லவி

விண்ணரசு மிக அண்மையிலே என
விளம்பி அறிவித்தார் வியப்புடன் அருளப்பர்

அனுபல்லவி

எண்ணமெல்லாம் ஆண்டவன்
எழில் வழியைச் சீராக்க
மண்ணதில் மாந்தரே
மனந்திரும்புங்கள் தெய்வ

சரணம்

ஆண்டவர் வருவார் அவரே பரிசுத்த
ஆவியாலும் நெருப்பால் ஞானஸ்தானம் தருவார்
வேண்டிய கோதுமையை விரும்பிக் களத்தில்
சேர்ப்பார்
வேண்டாப் பதரைத் தீயில் ஈண்டு சுட்டெரிப்பார்

# இயேசுவின் ஞானஸ்நானம்

இராகம் - கமாஸ்

தாளம் - ஆதி

பல்லவி

அன்புருவான தெய்வ அருளப்பரிடம் - யேசு
இன்புற ஞானஸ்நானம் இனிவுறப் பெற்றனரே

அனுபல்லவி

துன்புறு வாரின் துயர் துடைத்திட வந்த பாலன்
பண்புறும் ஞானஸ்நானம் பரிவுடன் கொண்டவரே

சரணம்

வானமும் திறந்தது வையகம் மகிழ்ந்து
வந்தது இறைஆவி வண்ணப் புரு உருவில்
ஞானமும் சிறந்தது நலிவெலாம் பறந்தது
ஞாலமகன் இவனென்று நல்கியது அசரீரி
தம்மாவியினால் மீட்க தண்நகர் பெத்தலையில்
இம்மானுவேல் என்னும் இறைதூதராக வந்து

## ஞானிகள் வந்தனர்

04. இராகம் - பௌலஹரி

தாளம் - ஆதி

பல்லவி

ஞானிகள் வந்தனரே - சோதிட
ஞான நூலறிஞராய் யூதேயா நகரினில்

அனுபல்லவி

வானின் கிழக்கில் விண்மீன் வழிகாட்டிடவே இந்த
மாநிலத்தில் யேசு மதலையை வணங்கவே

சரணம்

பெத்தலை நகர் செய்த பெருந்தவமோ அந்த
பெருந்தவத்தால் வந்த அருந்தவமோ? - புகழ்
அத்தனைக்கும் நடு வித்திடமோ? என்றே
ஆண்டவன் கர்த்தரை வேண்டியே துதித்திட

# இயேசுவைக் கண்டனர்

05. இராகம் - காபி

தாளம் - ஆதி

பல்லவி

வானமதில் தாரகை வழிகாட்டிடவே - மறை
ஞானியர் பாலனை நயனம் குளிரக் கண்டார்

அனுபல்லவி

மோன வழகு நிறை முகத்தடிகள் பாலன்
ஞான வழகு தவழ் நகை புரிந்திட கீழ்

சரணம்

கன்னி மரியாள் மடிதனில் தவழும் பாலன்
புன்னகை கண்டு உடல் பொடி சிலிர்த்தனரே
பொன்னுடன் தூபமும் வெள்ளைப் போளமும்
காணிக்கையாக
அன்னவனுக்கு நல்கி அடிபணிந்தனரே

# ஏரோது மன்னனின் பேராசை

06. இராகம் - கமாஸ்

தாளம் - ஆதி

பல்லவி

ஏரோது மன்னன் கொண்ட பேராசை தனைக்
கேட்டால்
தீராத துன்பம் கண்ணில் நீராகவே பொழியும்

அனுபல்லவி

யூதேயா நாட்டிற்கொரு மேதாவி யுதித்த கதை
காதேலே கேட்டு மன்னன் கருத்தில் வஞ்சகம்
கொண்டான்

சரணம்

நெஞ்சில் இரக்கம் இல்லா வஞ்சக மன்னன்
ஆண்மைப்
பிஞ்சு மதலைகளை வெஞ்சினத்தினால் கொல்ல
அஞ்சி சூசைமரியாள் ஆண்டவனின் அருளால்
கொஞ்சிடும் பாலனுடன் தஞ்சமாய்
எகிப்தடைந்தார்.

# இயேசுவிற்கேற்பட்ட சோதனை

இராகம் - மோகனம்

தாளம் - ஆதி

பல்லவி

இயேசுவிற் கேற்பட்ட சோதனைகள் போல்
இந்த உலகினில் யாருக்குண்டோ? எங்கள்

அனுபல்லவி

மாசிலாப் பரிசுத்த ஆவியான வரால்
பாலை வனத்திலே நாளைக் களித்தாரே

சரணம்

நாற்பது பகலும் நல்லிரவும் நோன்பும்
நாடியே உண்ணாது நன்மேனி வாடினவே
ஏற்பதிக் கற்களை எழிலப்ப மாக்குக
என்னாவி புகல இறைமொழி கூறிய (இயேசு)

# கலிலேயா நாட்டில் யேசு

08. இராகம் - திலங்

தாளம் - ஆதி

பல்லவி

கலிலேயா நாட்டிற்கு கடுகி வந்தார் - யேசு
நலிவாய் அருளப்பர் சிறைப்பட்டதை யறிந்து

அனுபல்லவி

வலிவான இறையவன் வளந்திகழ் அருள் பெற
இருளான மக்களுக்கு ஒளியாக உதித்த யேசு

சரணம்

மனந் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜம்
தினம் உமக்கே எனத் திருவாய் மலர்ந்தார்
நிதந்துயர் போக்கிடும் நன்நிமலனாம் ஆண்டவனை
பதம் துதித்தே அவனைப் புகன்றிடும் தேவபாலன்

## இயேசுவின் முதன்நான்கு சீடர்கள்

09. இராகம் - பாகேஶ்ரீ

தாளம் - ஆதி

பல்லவி

என்பின்னே வாருங்கள் என்றழைத்தார் யேசு
அன்பின் வழி செல்லும் பண்புள்ள சீடரை

அனுபல்லவி

துன்ப வலை வீசித் துயர் மீன் பிடிக்க வேண்டாம்
இன்ப மனிதர் தமை இகத்தில் தருவேன் இதோ

சரணம்

இராயப்பரும் சோதரர் பெலவேந்திரரும் அன்பு
யாகப்பரும் தம்பி அருளப்பரும் பண்பில்
தூய சீடர் நால்வர் தொடரத் தேவபாலன்
தோயும் இறையருளில் துயர்களை நீக்கிட

## இயேசு செய்த புதுமைகள்

10. இராகம் - தேஷ்

தாளம் - ஆதி

பல்லவி

அற்புதப் புதுமைகள் ஆற்றினரே - யேசு
பொற்புவியில் புனித நற்செய்தி யறிவித்து

அனுபல்லவி

கற்பவர் களித்திட கருத்தில் விண்ணரசினை
சொற்பொழிவில் ஆற்றி சொரிந்தனரே அருளால்

சரணம்

வருத்திடும் நோய்களை வறுமையை பிணிகளை
வராது குணப்படுத்தி தீராத துன்பம் தீர்த்தார்
வழுத்தியே ஆண்டவனை வாயாரப் புகழ்ந்தினரே
பெருத்த திரள் மனிதர் புகலிடமாய் அடைந்தார்

# ஜெபத்தின் வல்லமை

11. இராகம் - நாதநாமக்ரிய

தாளம் - ஆதி

பல்லவி

தந்தையிடம் கேளுங்கள் - கொடுப்பான்
விந்தையுலகை ஆக்கி விளங்கும் வானகத்து

அனுபல்லவி

முந்தை இறையவனை தேடுங்கள் காணுவீர்
அந்தக் கதவு தன்னைத் தட்டுங்கள் திறக்கும்

சரணம்

தனயன் அப்பம் கேட்டால் தந்தை கல்
கொடுப்பானோ?
வினயமாய் மீன் கேட்டால் விடப்பாம்பை
தருவானோ?
கனவிலும் நனவிலும் கர்த்தரை ஜெபம் செய்வாய்
அனவரதம் உனக்கு ஆனந்தம் அவன் அளிப்பான்

12. இராகம் - பீம்பிளாஸ்

தாளம் - ரூபகம்

நல்ல மனமுடையோர் - என்றும்
நாடுவார் விண்ணரசை
வல்ல இறையவனின் அருளில்
வாழ்வு வளம் பெறுவார்

துன்பமுறுபவர்கள் - இறைவன்
தூயபதம் நினைத்தால்
இன்பப் பேறுகளைப் பெறுவார்
இகத்தில் மிளிர்ந்திடுவார்

சாந்த குணமுடையோர் - வாழ்வில்
சௌபாக்யமும் பெறுவார்
எந்தன் ஆண்டவனை - எண்ணி
இகத்தை ஆண்டிடுவர்

நீதி புகல்பவர்கள் - வாழ்வில்
நிறைவு பெற்றிடுவார்
ஓதிப் புகழ் நாமம் - பாடி
ஒளியும் பெற்றிடுவார்

இரக்கம் உள்ளவர்கள் இந்த
இகத்தை பெற்றிடுவார்
புரக்கும் உலகந்தனை - இன்பப்
புவியாய் ஆக்கிடுவார்

தூய மனமுடையோர் - இறைவன்
துரிய பாதங்களை
நாளும் சமாதானத்தை - நாடுவார்
நாதன் புதல்வராவார்

எண்ணத்தில் நீதியுள்ளோர் - என்றும்
எய்துவார் விண்ணரசை
விண்ணரசும் அவர்தம் - உரிமை
வியனுறப் பெற்றிடுவார்

## உலகிற்கு உப்பும் ஒளியும் நீங்களே

13. இராகம் - பெஹாக்

தாளம் - ஆதி

பல்லவி

காரமுள்ள உப்பாயிருங்கள் - உலகில்
சாரமில்லா வாழ்விலே பாரமான தன்றோ - என்றும்

அநுபல்லவி

பூரணமாய் புவியினுக்கே புத்தொளியே நீங்கள்
காரண கர்த்தா பெருமை காசினியில் காட்டி
வாழ்வீர

சரணம்

மலைமேல் வைத்திடும் நிலையான தீபம் போல
தலையான நற்செயல்கள் தரணியில் நீர் புரிவீர
தலைவராம் தந்தையின் மகிமையை உலகிற்கே
தொலையாத நல்லொளியாய் தோன்றிடச் செய்து
வாழ்வீர

# திருச்சட்டம்

14. இராகம் - பூர்விகல்யாணி

தாளம் - ஆதி

பல்லவி

திருச்சட்ட நிறைவேறும் திருப்தியால் என்யேசு
திருவாய் மலர்ந்தார் தீனதயாபரன்

அனுபல்லவி

அருட்சட்ட மனைத்தும் அதுவும் பிசகாது
திருக்கட்டளை என்றும் மறைநூல் ஆகியது

சரணம்

விண்ணர சாண்டிடும் வியன்திரு மார்வகம் காட்டும்
வண்ணத் திருச்சட்டம் வையத்தில் ஓங்கி நிற்கும்
மண்ணிலம் தனிலே மாபெரும் ஒழுக்கத்தை
எண்ணரும் மாநகர்க்கு எழில் வழி காட்டிடும்

# சகோதரனோடு சமாதானம்

15. இராகம் - ஆரபி

தாளம் - ஆதி

பல்லவி

உன்சகோதரனோடு உலகில் சமாதானம்
என்றுமே செய்து நீ எழில் வாழ்வு வாழ்வாய்

அனுபல்லவி

வன்புச் சின்மம் கொண்டு வாழ்வைக் கெடுக்காமல்
அன்புடன் நேசித்து அகிலத்தில் வாழ்ந்திட

சரணம்

பீடத்தில் மேலே உன் காணிக்கை தரும்போது
பிரியமாய் சமாதானம் பிறந்தவனுடன் செய்வாய்
தேடக் கிடைத்திடாத சோதரனைப் பழித்தால்
தீய எரிநரகம் காசினியில் கிடைக்கும்

# சமரஸம் செய்து கொள்

16. இராகம் - ஹமீர்கல்யாணி

தாளம் - ஆதி

பல்லவி

சமரசம் செய்து வாழ்வீர் - எதிரியோடும்
சமரசம் செய்து வாழ்வீர்

அனுபல்லவி

உமதும் நற்குணத்து உத்தமப் பண்போடு
உலகினில் நீதிபதி உவந்துனை மெய்ச்சிடவே

சரணம்

கண்ணெடுத்தும் ஒரு பெண்ணையும் பாராதே
காமமென்பது கொடும் பாபமென்றோ - உலகில்
மண்ணிலத்தில் பிறமாதர்மேல் இச்சை கொண்டால்
மாபெரும் பாதகம் தான்வரும் ஆதலால்

## ஊறுதரும் உறுப்பை உடனே பிடுங்கிவிடு

17. இராகம் - ஸிந்துபைரவி

தாளம் - ஆதி

பல்லவி

உன்வலக் கண்ணில் ஊறுவந்தால் அதை
உடனே பிடுங்கி நீ எறிவது நலமே

அநுபல்லவி

நின்னுடல் முழுவதும் நீசமடையாமல்
உன் ஒருகண் அழிந்து போவது நலமே

சரணம்

வலக்கர முனக்கு வாதை செய்வதானால்
வாளினால் அதை வெட்டி எறிந்துவிடு
கலத்திடும் நரகத்தில் முழுக்கவுன் னுடலும்
கலங்கிடா வண்ணம் இலங்கவே காத்திடு

# உன் வலக் கன்னத்தில் அறைந்தால்

18. இராகம் - ஸிந்துபைரவி

தாளம் - ஆதி

பல்லவி

உன்வலக் கன்னத்தில் அறைந்தா னானால்
நின் னிடக் கன்னத்தைக் காட்டிடுவாய் மனிதா

அநுபல்லவி

அன்புத் தீயோர் தனை நீ வாழ்வில் எதிர்க்க
வேண்டாம்
அன்புடன் நேசிப்பாய் அவனி வாழ்வினிலே

சரணம்

உன்னாடைக்கே வழக்கு உன்னிடம் வேண்டி
வந்தால்
உள்ளம் மகிழ்ந்து நீயும் உவந்தளிப்பாய்
மேலாடை
கல்லால் ஒரு கல் வரக் கட்டாயப் படுத்தினால்
நல்லாய் இரு கல் தொலை கடுகி நடந்திடுவாய்

# ஆணையிடாதே

19. இராகம் - கரஹரப்ரியா

தாளம் - ஆதி

பல்லவி

ஆணையிடாதீர் அகிலத்து மாந்தரே!

ஆக்கல் அழித்தலும் மூடல் ஆகுமோ -அதனாலே

அனுபல்லவி

ஆணை விண்ணுலகினில் ஆண்டவன் அரியணை

ஆணை மண்ணுலகினில் ஆண்டவன் கால்மணை

சரணம்

வெள்ளைத் தலைமுடியை கறுப்பாக்க இயலுமோ

வெறும் கறுப்பு முடியை வெண்ணிற

மாக்குவாயோ

கள்ளம் கபடமில்லா கருத்துரைப் பீர் என்றும்

காசினி மீதினில் ஆசியைப் பெற்றிட

## பகைவனுக்கே அன்பு செய்வாய்

20. இராகம் - அமிர்தவர்ஷனி

தாளம் - ஆதி

பல்லவி

பகைவனுக்கு அன்பு பாரில் செய்து வாழ்வாய்
இகமீதில் இன்னல் படுவோர்க் கிரங்கியே

அனுபல்லவி

தகைமை நிறை வானகத் தந்தையின்
மக்களெனும்
பெருமையுடன் வாழ்ந்து நின்றமை யுள்ளவாக

சரணம்

வான்மழை எல்லோர்க்கும் வழங்கிடுதல் போல
மானில மீதினில் யாவர்க்கும் அன்பு செய்வாய்
தேனமுதாம் அன்பால் தெய்வந் தந்தை மகிழ்வார்
வானகத் தந்தை போல் வளநிறைவு பெறுவீர

# பிச்சையிடும் முறை

21. இராகம் - செஞ்சுருட்டி

தாளம் - ஆதி

பல்லவி

உன் வலக்கை செய்வதை இடக்கை
அறிந்திடாமல்
நற்பல தானங்கள் நானிலத்தில் புரிவாய்

அனுபல்லவி

தற்புகழை நாட்டிடத்தான் பறை சாற்றாதே
அன்புடன் பிச்சை நீ அனாதைக்கு இடும்போது

சரணம்

கைமாறு கருதாமல் காட்டிக் கொடுக்காமல்
இம்மா நிலந்தனில் இனிதறம் ஆற்றுவாய்
நம்மானிடர் அறியா நற்செயல்கள் புரிவாய்
அம்மா மறைத் தந்தையும் அகமகிழ்ந் திடவே

## ஜெபிக்கும் முறை

சுத்த மனத்துடன் பக்தியாய் ஆண்டவனை
நித்தமும்
செபம் செய்து நீதுதிப்பாய் - புவியில்

22. இராகம் - சிவரஞ்ஜனி
தாளம் - ஆதி

பல்லவி

சுத்த மனத்துடன் பக்தியால் ஆண்டவனை
நித்தமும் செபம் செய்து நீதுதிப்பாய் - புவியில்

அனுபல்லவி

இத்தரை மீதினில் இறைவனைச் செபித்து நீ
பக்தி செய்வதை வெளி வேடமாய்க் கருதாமல்

சரணம்

மகிமை இறைவன் நாமம் மௌனமாய் ஜெபித்திடு
மணவிடத் தலைஇழுத்து மனத்தினில் ஜெபித்திடு
மகிதலந் தனிலே மாட்சி ஜெபந்தனை
அகில காரணரான ஆண்டவனும் அறிவாய்

## நோன்பிருக்கு முன்

23. இராகம் - மாண்டு

தாளம் - ஆதி

பல்லவி

மாண்பு நிறைந்திடும் நோன்பிருக்கும் போது
வேண்டுதல் செய்திடுவாய் வெளிவேடம்
கொள்ளாமல்

அனுபல்லவி

காண்பவர் யாவரும் கண்டிடா வண்ணம் நீ
ஈண்டு இவ்வுலகினில் பூண்டிடும் தெய்வீக

சரணம்

மறைந்திருந்து காணும் மாட்சி நிறைந்த தந்தை
நிறைந்திடும் அருள்தனை நிதமும் பொழிந்திடுவார்
செழித்திடும் நெய்தடவி சீர்முகம் கழுவி பிறர்
அறிந்திடா வண்ணம் நோன்பை ஆற்றிடுவர்
உலகில்

# உண்மைச் செல்வம்

24. இராகம் - தோடி

தாளம் - ஆதி

பல்லவி

அழியாச் செல்வம் அருட்செல்வம் - அந்த
அருட் செல்வம் எங்குளதோ அங்குன்
மனமிருக்கும்

அனுபல்லவி

அழிறஞ் செல்வர் தன்னை அவனியில் சேர்க்க
வேண்டாம்
அதனை பூச்சி துருவும் திருடர் கவர்ந்திடுவார்

சரணம்

விண்ணுலகில் செல்வம் விரும்பிச் சேர்த்து
வைத்தோம்
வீணே திருடர்களும் பூச்சி யரிப்பதில்லை
பண்ணும் நல்லன்பினால் பாபங்கள் நீக்கிடுவாய்
எண்ணம் எல்லாம் அந்த விண்ணுலகில்
இருக்கும்

# உன்கண் தான் உடலுக்கு விளக்கு

25. இராகம் - கானடா

தாளம் - ஆதி

பல்லவி

உடலுக்கு உன்கண்தான் விளக்கு - கண்ணில்
ஊறு வந்தால் அது ஒளியே இழுக்கு உந்தன்

அனுபல்லவி

உடலுக்கு என்றுமே ஒளிதரும் கண்களே
உயர் கண்களின் தோல் உன் உடல் இருளே

சரணம்

உன்னகத்தில் இருக்கும் ஒளியே இருளானால்
கன்னங்கறுத்த இருள் காரிருளா மன்றோ
உன்னுள்ளத்தில் ஒலியை ஏற்றிடுவாய் - அருளால்
உடல் ஒளியாய் கண்டு உயரொளியைக் காண்பீர்

# இரு தலைவர்களுக்கு எவர் ஊழியம் செய்வார்

26. இராகம் - ஷண்முகப்ரியா

தாளம் - ஆதி

பல்லவி

இருதலைவர்களுக்கு எவர் ஊழியம் செய்வார்?
இரு நிலந்தன்னிலே ஒரு தலைவனுக் கன்றி

அனுபல்லவி

அருள் நிறை ஆண்டவன் ஒருவனே தலைவன்
இரு நிதிச் செல்வத்திற்கும் ஈண்டடிமை யாவாரே

சரணம்

வேண்டிய தலைவனே ஆண்டவன் ஆகுவான்
தூண்டும் அன்பு செய்து தூயவனாக வாழ்வாய்
ஆண்டவனுக்கு என்றும் அடிமை செய்பவன்
வாழ்வில்
பூண்டிடும் செல்வத்திற்கு ஈண்டடிமை யாவானோ?

## கடவுளை நம்பு

27. இராகம் - ஸிம்மேந்ரமத்யமம்

தாளம் - ஆதி

பல்லவி

கருணைக் கடலான கடவுளை நம்புவாய்
அருள் சேர் இறைவனின் அரசினை தேடுவாய்

அனுபல்லவி

இருள் சேர் கவலைகள் இகத்தினைக்கு
வேண்டாம்
தருவான் இறைவன் தண்ணுடை வுடையோம்

சரணம்

வானத்துப் பறவைகள் வாய்ப்பில்லை
வளர்கதிர் அறுப்பதும் சேர்த்து வைப்பதில்லை
மோனப் பறவை கட்கு முந்து முனைவூட்டுதில்லை
ஞானக் கடவுள் உண்டு சோகக் கவலை
ஏனோ?

## தீர்ப்பிடாதே

28. இராகம் - தேஷ்

தாளம் - ஆதி

பல்லவி

வெளிவேடங் கொள்ளாதே மனிதா- நன்மை
அறியாத தீர்ப்பினை அயவருக் கிடாதே

அனுபல்லவி

அளவானதை அளந்து அயலார்க் களித்து -
அதே
அளவேதான் உனக்கு அளந்து கிடைப்பதனால்

சரணம்

முத்துக் கருத்துக்களை முட்டாள் பன்றிகளின்
முன்
எத்தமும் நீயும் எறியாமல் பாதுகாப்பாய்
வித்தகக் கருத்தினை விழுங்காது பன்றிகள்
எத்தி மிதத்து விடும் எழிலான பூமியின்

## முள்முடி

29. இராகம் - ஹம்சத்வனி

தாளம் - ஆதி (சதுஸ்ரம்)

கண்ணிகள்

கூரிய முள்ளால் பின்னிய முடியைக்
கோமகனுக்குப் புனைவோம்
நேரிய பிரம்பால் நெஞ்சு உடம்பெல்லாம்
நிலம் துடித்திட அடிப்போம்

யூதரின் அரசே வாழி என உமிழ்ந்து
உவந்தே நகைத் திடுவோம்
காதகன் போர்வை அகற்றியே உடலில்
கசையடி கொடுத்திடுவோம்

செக்கச் சிவக்க செந்நிறக் கன்னம்
சிவந்திட அடித்திடுவோம்
மற்றக் கன்னம் காட்டினால் அதற்கும்
மறு அடி கொடுத்திடுவோம்

முழந்தாளிட்டே முள்முடி மன்னர்
முன்னின்று வாழ்த்திடுவோம்
செழுஞ் செவ்வாடை களைந்தே இன்றே
சிலுவையில் அறைந்திடுவோம்

## இயேசு சிலுவை சுமந்தது

இராகம் - சுபபந்துவராளி

தாளம் - ஆதி

செம்பதும் பாதமலர் செங்குருதி சிந்தச் சிந்த
சிலுவை சுமந்தாரே - எம்பாப
நிலுவை சுமந்தாரே
வெம்பி வெம்பி விம்மி விம்மி வேதனைப்
பாபந்தன்னை
குரு சாகச் சுமந்தாரே - விழிக்
குருதியாய்ச் சொரிந்தாரே

கல்லுகள் இடறிடக் கடும்பாரம் சுமக்கையில்
சுள்ளென அடித்தாரே - யேசு
சுருண்டு விழுந்தாரே
சொல்லில் அடங்காத சோகந்தனைக் கொண்டு
சோர்ந்து அடித்தனரே

இன்னும் எழுந்தவர் நடந்தடி வைக்கையில்

இடறி விழுந்தாரே - காலும்

தடமும் புரண்டாரே

பொன்னுடல் தன்னிலே செந்நீர் வழிந்திடச்

சிலுவை அழுத்தியதே - நெஞ்சம்

இறையை வழுத்தியதே

செவ்வணத்தி ருமேனியில் செந்தழும்புக்
கோடுகளில்

செங்குருதி பொங்கியதே - ஐயோ

அங்கமெலாம் வீங்கியதே

கொவ்வை யிதழ்ப் புன்முறுவல் கோமளப் பூமுகம்
சாந்தம்

கொள்ளுவணம் கொண்டது தெய்வீகம் - அது

அள்ளிடுமே நெஞ்சமதை நாளும்

# இயேசு உயிர்த்தெழுந்தமை

ராகம் : காம்போதி

தாளம் : ஆதி

பல்லவி

கல்லறையில் உயிர்பெற்ற கதையைச்
சொல்வோம் - கேளீர்
வல்ல இறைமகன் யேசு வந்தே உயிர்த்தன
ரன்றோ


அனுபல்லவி

நல்லவான தூதர் வந்தே சொல்லிய செய்தி
சொல்லுவோம்
அல்லல் பாடுபட்ட யேசு ஆவியுயிர்
பெற்றாரென்றோ

சரணம்

ஆனந்த பரவச அற்புதமும் கொண்டோம்
ஞாலந்தனில் உயிர்த்த அந்த நற்செய்தி நாம்
சொன்னோம்
நீரங்கு போவதன் முன்பே கலிலேயாவுக்குப்
போறார்
ஆரங்கு சென்றாலும் அங்கே யேசுவைக்
காண்பார்களென்றார்.





SIVARANJANAM OFFSET PRINTERS
NO.183 Palaly Road,
Kondavil.